சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.81/2022</u>

18.11.2025

பி.வா.சா.1 திரு. கார்த்திகேயன், த/பெ. உத்திராபதி

<u>**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வாதி நிறுவனம் விநாயகமூர்த்திக்கு சொந்தமானது என்றால் சரிதான். வாதியின் நிறுவனம் பெட்ரோல், டீசல் விற்பனை செய்யும் நிறுவனம் என்றால் சரிதான். டீசல், பெட்ரோல் கரூர் மாவட்டம் ஆத்தூரிலிருந்து திருவாரூருக்கு எடுத்துவருவோம் என்றாலும் அது தான் எனக்கு பணி என்றாலும் சரிதான். வாதி நிறுவனத்திற்கு டி.என்.50 எ.டி. 1822 என்ற பதிவெண் கொண்ட வாகனம் சொந்தமானது என்றால் சரிதான். அந்த லாரியில் மூன்று சேம்பர்கள் உள்ளது என்றால் சரிதான். வாதி நிறுவனத்தில் 23.05.2018 லிருந்து மேற்சொன்ன லாரியில் டிரைவராக பணியாற்றி வந்தேன் என்றால் சரிதான். ஆத்தூர் டிப்போவிற்கு சொல்லப்படும் அடிப்படையில்தான் வாகனம் ஓட்டப்படவேண்டும் என்றால் சரிதான். நிறுவன உத்தரவுப்படி திருவாரூர், நீடாமங்கலம், தஞ்சாவூர், திருச்சி, கரூர், ஆத்தூர் செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஆனால் ரோடு சரியில்லாததால் மன்னார்குடி வழியாக செல்வேன். மன்னார்குடி வழியாக செல்ல கம்பெனி அதிகாரம் வழங்கவில்லை என்றால் சரிதான். திருவாரூர் - தஞ்சாவூரில் ரோடு வேலை நடைப்பெற்ற போது வாகனங்கள் ஒருபக்கமாக சென்றுவந்தது என்றால் இல்லை. நான் ரூட்டு மாறி ஓட்டினால் கம்பெனியில் சரக்கு வழங்குவதை நிறுத்திவிடுவார்கள் என்றால் சரிதான். நான் ரூட்டு மாறி சென்றபோது கம்பெனியால் வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது என்றால் இல்லை. வாகனம் வேகமாக சென்றதால் ஒருமுறை நிறுத்தினார்கள். நான் எந்த ரூட்டில் செல்கிறேனோ அதே ரூட்டில் திரும்ப வரவேண்டும் என்றால் சரிதான். நான் மன்னார்குடி வழியாக எத்தனை முறை சென்றிருப்பேன் என்றால் ஞாபகமில்லை. திருவாரூரிலிருந்து - ஆத்தூர் வரை சுமார் 430 கி.மீ வரும் என்றால் சரியல்ல. கரூர் சுற்றி வரும் போது 448 கி.மீ வரும். நிறுவன உத்தரவுப்படி சொன்ன வழியில் சென்றுவந்தால் 55 லி. மட்டுமே டீசல் பிடிக்கும் என்றால் எனக்கு தெரியாது. மன்னார்குடி வழியாக சென்றால் 23 கி.மீ மேல் கூடுதலாக வரும். மன்னார்குடி வழியாக செல்லும் போது 10 கி.மீ மட்டுமே கூடுதலாக

வரும் என்றால் சரியல்ல. நான் ஓட்டிய லாரியில் வேகக்கட்டுப்பாடு கருவி உள்ளது என்றால் சரிதான். அதனால் 60 கி.மீ. வேகத்திற்கு அதிகமாக செல்லமுடியாது என்றால் சரிதான். வாதி நிறுவனத்தில் லாரியின் டேங்கை பில் பண்ணி ஆத்தூர் செல்லவேண்டும் என்றால் சரிதான். நான் தினந்தோறும் வாகனத்திற்கு டீசல் போடும் போது ரசீதில் கையொப்பம் போடுவேன் என்றால் இல்லை, எப்போதாவதுதான் போடுவேன். நான் லாரி ஓட்டிச்சென்ற போதெல்லாம் 84 லி. டீசல் பிடித்துள்ளேன் என்றால் இல்லை. நான் ஒவ்வொரு முறையும் எவ்வளவு டீசல் பிடித்துள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. 60 அல்லது 65 லி. மட்டுமே பிடித்திருப்பேன். எதிர்வழக்குரையில் நான் 84 லி. டீசல் பிடிக்கவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். லாரி 1 லி டீசலுக்கு 4.5 கி.மீ. போகும். நான் சொல்வது போல் 4.5 லி. - க்கு ஒரு கி.மீ செல்லாது என்றாலும் 7.5 கி.மீ செல்லும் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1, 2 ரசீதுகளில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதல்ல, கம்ப்யூட்டர் பில்லில் மட்டுமே கையெழுத்து போட்டுள்ளேன். எதிர்வழக்குரையில் என்னிடம் கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கரூர் சென்றபோது எந்தக்காலத்திலும் ரசீதுகளில் கையொப்பம் போட்டதில்லை. கொரோனா காலத்திலும் பங்க் வேலை நடந்ததா என்றால் நடந்தது. நான் பணியிலிருந்து பணி நீக்கப்படும் வரை 4562 லிட்டர் டீசல் பிடித்துள்ளேன் என்றால் மன்னார்குடி சுற்றி சென்றதால் பிடித்திருப்பேன். நான் டீசல் பிடித்த வகையில் வாதி நிறுவனத்திற்கு ரூ.3,31,441.71/-ஐ நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் இல்லை. வா.சா.2 தற்போது எனக்கு பதிலாக லாரியை ஓட்டிவருகிறார் என்றால் சரிதான். நிறுவனம் அனுமதிக்கப்பட்ட வழியாக சென்றால் 440 கி.மீ.க்கு மேல்வராது என்றால் சரிதான். வா.சா.2 சுரேஷ்குமார் தற்போது நாள் ஒன்றுக்கு 55 லி.க்கு மேல் டீசல் பிடித்தது இல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் நிறுவன விதிப்படி நேர்வழியாக சென்றால் 55 லிட்டர் மட்டுமே பிடிக்கும் என்றாலும் சுற்றி சென்றால் மட்டுமே கூடுதலாக பிடிக்கும் என்றாலும் சரிதான். வா.சா.2 சுரேஷ் பணிக்கு வந்தபின்னிட்டு தான் லாரியின் டீசல் டேங்க் சாவி லாரி நிறுவனத்திடம் உள்ளது என்றாலும் அதற்கு முன்புவரை சாவி என்னிடம் தான் இருந்தது என்றாலும் சரியல்ல. நான் வழியில் லாரியை நிறுத்தி டீசலை விற்பனை செய்துள்ளதால்தான் அதிக கூடுதலாக டீசல் பிடித்தது என்றால் சரியல்ல. நான் டீசல் பில்லில் கையொப்பம் போட்டுவிட்டுதான்

லாரியை எடுக்கவேண்டும் என்பது கம்பெனி விதி என்றால் சரியல்ல. நான் மன்னார்குடி வழியாக சுற்றி சென்றபோது 55 லிட்டருக்கும் மேலாக டீசல் பிடித்துள்ளேன். மன்னார்குடி வழியாக ஒருமுறை மட்டுமே சென்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு மாதாந்திர சம்பளம் இல்லை என்றாலும் கிலோ மீட்டரில் தான் சம்பளம் வழங்குவார்கள் என்றாலும் இல்லை. நான் எடுத்து வரும் பெட்ரோல், டீசல்களில் கலப்படம் உள்ளதா என்பதற்காக தான் டென்சிட்டி பார்ப்பார்கள் என்றாலும் அளவுக்கு சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தபோது என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். போலீசார் விசாரணைக்கு என்னுடன் யார் வந்தார்கள் என்றால் நான் மட்டுமே சென்றேன். போலீசார் விசாரணையின் போது நான் வழக்கறிஞர் ஒருவரையும் தி.மு.க. கட்சிக்காரரையும் அழைத்து சென்று முதல் தகவல் அறிக்கை போடாமல் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளை அசிங்கமான வார்த்தையால் திட்டியதால் என்னை கைது செய்தார்கள் என்றால் இல்லை. கிரிமினல் வழக்கில் நான் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதத்தொகை செலுத்தியுள்ளேன் என்றால் போலீசார் கட்டாயப்படுத்தியதால் பணம் கட்டியுள்ளேன். நான் பணியிலிருந்த வரை 281 முறை ஆத்தூர் சென்றுவந்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. லாரி டீசல் டேங்கில் வேறு சாவிகள் பயன்படுத்தி டீசல் எடுக்க வாய்ப்புள்ளது என்றால் இல்லை. நான் 70 லிருந்து 85 லிட்டர் கூடுதலாக பிடித்துள்ளேன் என்றாலும் அதற்கான நஷ்டத்தை செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கு தாவாபடி பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.